ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்யதர்மம்.

गुहायां गेहे वा बहिरपि वने वाद्रिशिखरे
जले वा वह्नौ वा वसतु वसतेः किं वद फलम् ।
सदा यस्यैवान्तः करणमपि शंभो तव पदे
स्थितं चेद्योगोऽसौ स च परमयोगी स च सुखी ॥

शिवानन्दलहरी ।

ஒருவன் குகையிலோ, வீட்டிலோ, வெளியிலோ, கானகத்திலோ, மலையின் நுனியிலோ, அக்னியிலோ வஸிக்கட்டும். இவ்விதம் வஸிப்பதால்மாத்திரம் யாதொருபலமும் உண்டாகாது. ஹே சம்போ! ஸகலஜனங்களுக்கும் சுகத்தையளிக்கும் சக்திவாய்ந்த பரமேசுவர! எவனுடைய அந்தக்கரணமானது எப்பொழுதும் உம்முடைய சரணத்தில் பற்றுதலையடைந்திருக்கின்றதோ அதுதான் யோகம். இவ்விதசித்தவிருத்தியுடையவனே மிகவும்சிறந்தயோகி. அவனே சுகமுடையோன்.

நாம் ஒரு காரியத்தைச்செய்ய எத்தனித்தால் அதை எதற்காகச்செய்கிறது. அதினால் யாது பயனெனக்கருதாமல் செய்வது சரியல்ல. ஒருவன் ஜலத்திலோ,மலையிலோ,அக்கினியிலோ வஸிப்பானாகில் அதினால் எவ்விதபலம் நமக்குக்கிடைக்கும் என்றுசற்று கவனிக்கவேண்டும். சாஸ்திரங்களிலும் பெரியோர்களாலும் இவ்விதவாஸத்திற்கு ஒன்றும் கூறப்படவில்லை. பகவத்யானத்தால்மாத்திரம் அவரது அனுக்கிரகத்தைப் பெறலாமேயன்றி வேறு விதம் ஸாத்தியமில்லை. அவ்விதத்தியானத்தை எங்கிருந்து செய்தாலும் பிரபு அனுக்கிரகிக்க ஸித்தமாயிருக்கிறார். ஆகையால் பரமேசுவரனுடைய சரணாரவிந்த பக்திதான் மோக்ஷத்திற்கு முக்கிய ஸாதனம். அதில்லாமல் எந்தவிடத்திலிருந்தாலுமுபயோகமில்லை. அது இருப்பின் எங்கிருந்தாலும் பலனுண்டு, என்றறிந்து பயனற்ற வீணான காரியங்களில் காலத்தைப் போக்காமல் ஈசுவரத்தியானம் செய்து ஜன்மஸாபல்யத்தைப் பெறவேண்டும்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்

வேதாந்தஸாரம்.

(100-வது பக்கத்தொடர்ச்சி)

3-வது சமாதிஷட்கநிருபணம்.

(1) சமம். (2) தமம். (3) உபரதி. (4) திதிக்ஷா. (5) ஸமாதானம். (6) சிரத்தை என்கிற ஆறுகுணங்கள்.

(1) சமம்:— ஆத்மஸ்வரூபத்தை அடைவதற்கு ஸாதனங்களாய்க் கூறப்பட்ட சிரவணமனனாதிகளைத் தவிர இதரவிஷயங்களிலிருந்தும் மனத்தைத் திருப்புவது சமமாகும். சமம்—அந்தக்கரணதண்டம். இக்கருத்தையே,

देहादिब्रह्मपर्यन्ते ह्यनित्ये भोग्यवस्तुनि ।
विरज्य विषयव्रातात् दोषदृष्ट्या मुहुर्मुहुः ।
स्वलक्ष्ये नियतावस्था मनसश्शम उच्यते ॥

"தேகம் முதல் பிர்மாவரையிலுள்ள நிலையற்றதான போக்கியவஸ்துக்களிலிருக்கும் தோஷங்களை அடிக்கடி நன்குணர்ந்து அவைகளை விட்டுத்தனக்கு லக்ஷியமான ஆத்மஸ்வரூபத்தில் மனதிற்கேற்படும் ஸ்திரமான அவஸ்தைக்குச்சமமென்று பெயர்" என்று ஒருமஹான் கூறுகிறார். பின்னும்,

एकवृत्त्यैव मनसः स्वलक्ष्ये नियतास्थितिः ।
शम इत्युच्यते सद्भिः शमलक्षणवेदिभिः ॥

"இந்திரியங்களாகிற பலமார்க்கங்களால் வெளியில் கண்டவிடங்களில் போகாமல் ஒரே விருத்தியுடனே தனக்கு லக்ஷியமான பரமாத்மஸ்வரூபத்தில் எப்பொழுதும் இருக்கும் மனதினுடைய இருப்பைச்சமம்" என்று சமத்தின் இலக்கணத்தை அறிந்த கற்றோர்கள் கருதுகின்றார்கள்.

(2) **தமம்:—** வெளியிலுள்ள இந்திரியங்களைப்பரம்பொருளை அறிவதற்குரிய ஸாதனங்களைத்தவிர மற்ற விஷயங்களிலிருந்தும் திருப்புவதே தமமாகும். தமம்-புறக்கரணதண்டம்.

विषयेभ्यः परावृत्य स्थापनं स्वस्वगोलके ।
उभयेषामिन्द्रियाणां स दमः परिकीर्त्यते ॥

"பாஹ்யம், ஆப்யந்தரம் என்று சொல்லப்பட்டகர்மேந்திரியங்கள் ஞானேந்திரியங்கள், மனம் இவைகளை விஷயங்களிலிருந்தும் திருப்பி அந்த அந்தக் கோளகத்திலே வெளியில் போகாமல் ஸ்தாபித்துவைப்பதற்குத் தமமென்று பெயர்" என்று ஸ்ரீசங்கராசார் யாள் அறிவிக்கின்றார்கள்.

(3) உபரதி:— வெளியிலுள்ள விஷயங்களில் செல்லாமல் திருப்பப்பட்டிருக்கும் நம்முடைய இந்திரியங்கள் பகவத்விஷயமான சிரவண, மனனாதிகளைத்தவிர வேறுவிடங்களில் போகாமல் அடங்கியிருப்பது உபரதியாகும். உபரதி-விடில்.

बाह्यानालम्बनं वृत्तेरेषोपरतिरुत्तमा ।

"இந்திரியங்கள் வெளியிலுள்ள எவ்விதவிஷயங்களிலும் ஸம்பந்தப்படாமலிருப்பதே சிறந்த உபரதியாகும்" என்று பரமாசார்யாளும் கருதுகிறார்கள். 'முற்கூறிவ சம,தமாதிகளால் இந்தப்பொருள் கிடைத்துவிடுமாகையால் இதற்காக வேறாக உபரதி என்ற ஒருகுணம் வேண்டும் என்பதில்லை' எனச்சங்கித்து வேறுவிதமாய்க் கருதுகிறவர்களும் உண்டு. அதாவது **विहितानां कर्मणां वि-धिना परित्यागः** சாஸ்திரங்களில் அந்த அந்த ஜாதி வர்ணாசிரமங்களுக்கு அநுஷ்டிக்கும்படி கூறப்பட்ட கர்மாக்களைச் சாஸ்திரமுறைப்படி விடுவது உபரதி இதனால் ஸகலகர்ம ஸன்னியாஸபூர்வகமாய்ப் பிர்மவிசாரத்திற்கருகமான ஸன்னியாஸாசிரமத்தைப்பெறுவது உபரதி" என்று பொருளேற்படுகின்றது:— இவ்விதமே

उपरमयति कर्माणीत्युपरतिं शब्देन कथ्यते न्यासः ।
न्यासेन हि सर्वेषां श्रुत्या प्रोक्तो विकर्मणां त्यागः ॥

என்று கூறப்பட்டிருக்கின்றது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்

இந்து தர்மஸ்தாபன மசோதாவும், பீடாதிபதிகளின் நிலைமையும்.

தாம் சொல்வது உண்மையா, அல்லவா என்பதைச் சிறிதும் கருதாமலே அநேகர் மடாதிபதிகள்மீது தயவுதாட்சண்யமேது மில்லாமல் குறைசொல்லித் தோஷாரோபணம்செய்துகொண்டே யிருக்கிறார்கள். அப்படித் தோஷாரோபணம்சுமத்துவோர் தமது நிலைமையைப்பொறுத்தவளவில் சிறிதேனும் ஆசங்கை கொள்வதில்லை. ஏனென்றால், எவர்மீது தாம் குறைசொல்லிக் குற்றங்கூறுகிறார்களோ, அவர்கள் (அம் மடாதிபதிகள்) வெளிப்பகட்டிலிருந்து விடுபட்டுத் தன்னந்தனியே வசிக்கிறார்கள். மேலும் தூஷிப்போர்மீது நடவடிக்கை நடத்தவோ, நேராகக் கண்டிக்கவோ முடியாதபடி அம் மடாதிபதிகளின் அந்தஸ்தும், நிலைமையும் குறுக்கிட்டு நிற்கின்றன. இதனாலே கெடுதிசெய்வோர்துபாடு கொண்டாட்டமாகவே ஆகின்றது. அடுத்தடுத்துக் குறைகூறுவதில் அவர்கள் எள்ளளவும் பின்வாங்குவதில்லை. இதனால் பாகுபாடறியும் குணவான்கள்கூட தம் ஸ்திதியையும், பொறுப்பையும் மறந்து பொதுக்கூக்குரலிற் கலந்துகொள்கிறார்கள். இதற்கு அநுகுணமாக மதத்திற் பற்றுதல் இல்லாதிருப்பதும் சேருகின்றது. மேற்றிசைக் கல்வியின் பரப்பினால் கொஞ்சநஞ்சமிருக்கும் மதாபிமானமும் விடுபட்டுப்போகிறது. ஆனால், எல்லாருமே அப்படியென்று சொல்வது கூடாது. சாமானியமாக இங்கிலீஷ் படித்தவன் மதத்தின்மீதும் மதாசாரியாள்மீதும் ஏதோ கொஞ்சம் அன்பும் ஆதரவுங்காட்டாமல் இருப்பதில்லை. சிறிது விட்டுக்கொடுப்பதாகக் காண்கிறது. இவையும் மற்றும் பல காரணங்களுமாகச் சேர்ந்ததன் முடிவே மானியச்சட்டமாக முன்வந்திருக்கின்றது. முன்பின் யோசியாமல் கண்டிதமான விதிகளோடு மடங்களையும், மடாதிபதிகளையும் சம்பந்தித்தவகையில் அச்சட்டம் பிரதிபலித்து நிற்கின்றது. சுருங்கச் சொல்லுமிடத்து நன்மதிப்போடும் உத்தம நோக்கத்தோடுமுள்ள குருக்களை அவர்தம் பூக்தி புரஸ்ஸரமான ஸ்தானத்திலிருந்து தணிவிப்பதோடு கமிஷனர்களின் போர்டு

எனப்படும் விசாரணை சங்கத்தார் ஆட்டுவிக்கும் பம்பரம் போல அவர் ஆடவேண்டிய ஸ்திதிக்குக் கொண்டுவந்துவிட்டது. இந்தக் கமிஷனர்கள் அடங்கிய போர்டைச் சேர்ந்தவர்கள் பெயருக்கு இந்துக்களெனப் பசப்பி இவ் வதிபதிகளின் ஆத்மாவலோகனஅந்தஸ்தைக்கவனியாத மனப்பான்மையோடிருக்கவும் கூடுமன்றோ. நம்மவர்பெரும்பாலோர்இந்தமடாதிபதிகளைப்பொதுவாக எங்ஙனம் கருதுகிறோமென்பது யாவருமறிந்த விஷயம். ஆகவே மடங்களைப்பொறுத்தமட்டில் நிர்ணயமாயிருக்கின்ற சட்டவிதிகளைச் சங்கிரஹமாக ஆராய்வது எவ்வளவு தூரம் அம்மடஸ்தாபனங்களைப் பாதிக்கக்கூடுமென்றும், இந்து ஜனங்கத்திலே அவை எப்படிப்பட்ட உணர்ச்சிகளை உற்பவிக்கச் செய்திருக்கின்றனவென்றும் நன்கு புலப்படுவது திண்ணம்.

பாதிக்கப்படக்கூடாத பூஸ்திதி சொந்தக்காரரின் நிலைமையையொப்ப மடாதிபதியின்நிலைமையும் இதுபரியந்தம்இருந்தது. ஏனென்றால் மடத்து பூசொத்திற் குடியிருப்போர்க்கு இருப்பு பாத்தியமில்லை. மடத்துசொத்திலிருந்துவரும் வருமானத்திற்கும் நேராக அளிக்கப்படும் மானியங்களுக்கும்மடாதிபதிகளேமுழுச் சொந்தக்காரர்களாவர். அப்படிப்பட்ட வருவாய்களைப்பற்றி எவருக்குங் கணக்கு ஒப்புவிக்கவேண்டிய ஆவசியகம் அவர்களுக்கில்லை. மடத்துவிஷயங்களைநிர்வாகஞ்செய்வதில் மடாதிபதிக்கே ஸர்வசுதந்தரமுமுண்டு. உள்ளபடி சீடர்கள் குருதட்சணையாக அதிபதிக்களிக்கும் சம்மானங்களும் காணிக்கைகளுமே மடத்து சொத்துக்களாகும். சீடர்கள் தாம் குருமுகமாக அடைந்தபலன்களையொட்டிச் சமர்ப்பிக்கும் நன்றியே காணிக்கைகளாகக் குருவிடம் சேருகின்றன. அப்படி வந்த பணத்தை வைத்துச் சேகரிக்கப்பட்டவை தான் மடங்களிலிருக்கும் ஸொத்துக்களாம். ஸர்வஸாதாரணமாயிருக்கும் இந்து சட்டத்தின் பிரகாரம் அடுத்தடுத்துப் பீடத்தை வகிக்கும் அதிபர்களுக்கு மடத்துசொத்துக்கள் சேருகின்றன. முதன்முதல் அளிக்கப்பட்ட தர்மசொத்து பரிபாலன மசோதாவிற் காண்பிக்கப்பட்ட நோக்கங்களும், காரணங்களும் என்ற தலையங்கத்தில் மடங்களில் பொதுக்காரியங்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் யதேஷ்டமாயிருக்

கின்றனவென்று குறித்திருப்பது தவறு. அது சரியானதுமல்ல. எது எப்படியிருந்தபோதிலும், தன்னுடைய எஸ்டேட்டிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் பலனையடையும் உரிமை மடாதிபதிக்கு உண்டு என்பதைப் பிரிவி கௌன்ஸிலார் உள்பட பல நியாயாதிபதிகள் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். அப்போதைக்கப்போது தயாரிக்கப்பட்டிருக்கும் ஹிந்துமத மானியங்களைப் பற்றிய மசோதாக்களும் மற்றும் ராஜதந்திரநிபுணர்கள் நியாயவாதிகள் முதலினோர் கூறிய அபிப்பிராயங்களும் மடாலயங்களை மேற்படி சட்டங்களுக்குள் சேர்க்கலாகாதெனவே அறிவிக்கின்றன. விசேஷ மதக்கோட்பாடுகளில்லாமலும் தெய்வத்துக்குச் சமதையாகப் பாவித்துக் கௌரவிக்கப்படும் மடாதிபதிகளுக்குப்பணம் சமர்ப்பிக்கவேண்டுமென்னும்நோக்கமில்லாமலும் இருக்கக்கூடிய நபர்களைச் சேர்த்தமைத்த பொது கமிட்டிகளின் பரிசிலனைக்கும், மேற்பார்வைக்கும் மடாலயங்களை உட்படுத்துவது விரும்பத்தகுந்ததல்லவென்று முத்துஸாமி அய்யர் கமிட்டியார் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். அப்படியிருக்க, இப்போதையசட்டத்தைஆதரிப்பவர்கள் முத்துஸாமிஅய்யர்போன்றபெரியோர்களைத் தமக்கனுகுணமாக உதாகரித்துக் கூறுவது நகைப்புக்கிடந்தருகின்றது.

இப்போது அமுலுக்குவந்திருக்கும் புதிய சட்டத்தில் மடாதிபதிகளைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பதைச் சிறிது ஆராய்வோம்.

இந்துமதச் சட்டத்தினாலும், நியாயஸ்தலத் தீர்ப்புக்களினாலும் மடாதிபதிகளுக்கிருந்த உரிமைகளெல்லாம் செக்ஷன் 5. (ii)வது விதிப்பிரகாரம் பறிமுதலாகின்றன. இனி மடாதிபதிகள் தம்வசமிருக்கும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் எல்லாவற்றையும் பொதுஜனங்களுக்காகப் பாதுகாக்கும் டிரஸ்டிகளாகிறார்கள். எனவே, அந்த சொத்துக்களின்பேரிலும் அவைகளுக்காகக் கிடைக்கும் வருமானத்தின்பேரிலும் மடாதிபதிகளுக்கு எவ்வித சுதந்தரமுமில்லை. இதாற்காக மடத்து சொத்துக்களைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவர்களென்றே ஏற்படுகிறது. சுவாமிகளுக்குக் கொடுக்கப்படும் காணிக்கைபோன்ற ஸ்தாவர சம்மானங்கள் மாத்திரம் அவர்களுக்குச் சொந்தமாம். போகட்டும். இவ்வளவு

தயவாவது காட்டுகிருர்களே. மேலே குறிப்பிட்டுக் காட்டியதை யொப்ப மடாதிபதிகள் 14-வது பிரிவின் பிரகாரம் கவர்ன்மெண்டாரால் அமைக்கப்படும் நிர்வாக போர்டாரின் ஆதீனத்திற்கு உட்பட்டவராவார்கள். அந் நிர்வாக போர்டார் மடங்களின் பொதுவான மேற்பார்வையைக் கவனிப்பதல்லாமல் தம் அபிப்பிராயத்திற்குச் சரியென்றும் அவசியமென்றும் தோன்றும் எல்லாக் காரியங்களையும் செய்வார்கள். மடங்கள் சரிவர பரிபாலிக்கப்பட்டு, அவைகளுக்காக விடப்பட்ட மானியங்கள் அவ்வந்த வகைகளில் நேருங்கூருமாக விநியோகிக்கப்பட்டு வருவனவாவென்பதையும் பார்க்க அந்த நிர்வாகப்போர்டார் அதிகாரம்பெற்றவராவார்கள்.

மடத்தின் உட்காரியங்களிலேயும் ஏதேனும் ஒரு காரியத்தை ஆதாரமாகக் காட்டிப் புகுந்து போர்டார் எவ்வளவுவேண்டுமானுலும் குறுக்கிடலா மென்பதற்கு இதைவிட வேறென்ன வேண்டும். உதாரணமாக செக்ஷன் 15. (i)வது உபவிதியின்கீழ் மடாதிபதிகள் தம் ஆதீனங்களையொட்டிக் கொண்டுவரும் வரவு செலவு திட்டப் பட்டியில் இன்ன தொகை அவசியம், இன்னது அனுவசியம் என்று நிர்ணயிக்கவோ, அல்லது தள்ளிவிடவோ போர்டாருக்கு அதிகாரமுண்டு. மடத்துக்காரியங்களுக்கு இந்தத் துகை போதும். இந்தத் துகையை மிகுத்தலாம் என்று நிர்ணயிக்கும் அதிகாரமும் அவர்களிடம் பொதிந்திருக்கிறது.

சென்னை சட்டசபையைப்போன்ற லோகல்சபையானது சக்கரவர்த்தியாராலும் பார்லிமெண்டாராலும்உத்தரவாதமிடப்பெற்றும் பாதுகாப்பதாக உறுதிமொழிகூறப்பட்டும் உள்ள பிரிடிஷ் பிரஜைகளின் சொத்து பாத்தியதைகளைப் பறிமுதல்பண்ணும்படியான சட்டத்தை நிறைவேற்ற அதிகாரங்கொண்டதா வென்பதைக் கவலையுடன் கவனிக்கவேண்டும். சரியானகாலத்தில் தகுதியான இடத்தில் இவ்விஷயம் விவகரிக்கப்படுவது நிச்சயம்.

இந்த நிர்வாக போர்டார் குறிப்பிடும் காலத்திற்குள்ளாக மடாதிபதிகள் ஒரு ரிஜிஸ்தர் தயார்செய்யவேண்டும். அதில் இப்போதிருக்கும் தலைவர், முன்னிருந்த அதிபதிகள் இவர்களுடைய

பெயர்களையும் பட்டத்திற்கு வரும் முறை இன்னதென்பதையும் விரிவாகக் கூறி அந்த ரிஜிஸ்டரைத் தாமே தயார்செய்து கையொப்பமிடவேண்டும். மற்றும், தர்மத்துக்காக விடப்பட்ட மானியங்கள், அவைகளைப்பற்றி தஸ்தாவேஜிகள், அவைகளை நிர்வகிக்கும் பத்ததி, செலவினங்களின் திட்டம், ஆபீசுச்செலவு, சிப்பந்திச்செலவு,மடத்தைச்சேர்ந்த இதர இனங்கள்,பொன்,வெள்ளி நகைகள், கல் ஆபரணங்கள், பாத்திரங்கள், மற்றுமுள்ள ஸ்தாவர சாமான்கள். அவைகளின் மதிப்பும், மற்றும் போர்டார் குறிக்கக்கூடிய இதர விவரங்களை மேற்படிரிஜிஸ்டரில் மடாதிபதி குறிக்கவேண்டுவது அவசியம்.

அப்படிப்பட்ட பதிவுபுஸ்தகத்திற்கண்ட விவரங்களைக்குறித்து விசாரிக்கவும், பிறகு தமக்கெட்டிய விவரங்களின் ஆதாரங்களை முன்னிட்டு பதிவு புஸ்தகத்திலுள்ள விவரங்களை மாற்றவோ, அவைகளில் திருத்தம் செய்யவோ போர்டார் முனைந்து, பிறகு, அதை அங்கீகரிக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். இப்படிச் செய்யப்படும் தஸ்தாவேஜியே மடத்துச் சாசுவதமெனக் கருதப்படும். ஒவ்வொரு வருஷத்திலும் மடாதிபதியானவர் (35-வது பிரிவின் பிரகாரம்) ரிஜிஸ்டர் புஸ்தகத்தை ஆராய்ந்து அதில் எதாவது சேர்த்திருந்தாலும், அல்லது எடுத்திருந்தாலும் அப்படிப்பட்ட அம்சங்களைக் குறிப்பிடவேண்டும். இப்படிப்பட்ட அம்சங்களுக்கு மடாதிபதியே முன்னர்க் குறித்ததுபோல கையொப்பமிடவேண்டும், பிறகு போர்டார் ஆபீசுக்கு அது செல்லும். அப் பதிவுபுஸ்தகத்தின் நகல் வேண்டுமாயின் மடாதிபதியவர்கள் தமது உபயோகத்திற்காக எடுத்துக்கொள்ளலாம்.

சட்டவிதிகளை யொட்டி இந்த விவரங்கள் அவசியமாதல் பற்றி பதிவுபுஸ்தகத்தை ஆராய்ந்து கையொப்பமிடும் மடாதிபதிகள் பொய்க்கூறலினாலாவது. தவரான தஸ்தாவேஜிகளினாலாவது இந்தியன் பினல்கோர்ட் சட்டத்திற்குத்தாம்ஆகவேண்டுவதைக் கருதி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும் என்பது இதனால் நன்கு நிதர்சனமாகின்றது.

மற்றும் இதனால் ஏற்படுவதென்ன? தாம் எழுதிக்கொடுத்திருக்கும் ரிஜிஸ்டர் புஸ்தகத்தில் கண்டபிரகாரமே காரியங்களை மடாதிபதிகள் செய்யவேண்டும். அங்குக் குறிப்பிட்டிருக்கும் சொத்துக்களை பந்தோபஸ்தாகக் காக்கும் பொறுப்பாளிகளாயிருக்கவேண்டும். மற்றவாகளுக்கு உத்திரவு சொல்லும் டிரஸ்டிகளாயிருந்து போர்டார்கொடுக்கும் தகவல்களை யனுசரித்து ஒவ்வொன்றையும் நிறைவேற்றவேண்டும். சட்டத்து 36-வது பிரிவிற்கண்ட இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு தன் சொந்தசொத்தை ஒருவன் எவ்வளவு கண்ணுங்கருத்துமாகக் கவனிப்பானோ அவ்வளவு கருத்தோடு மடாதிபதியார் மடத்து சொத்துக்களைப் பரிபாலிக்கவேண்டும். 37-வது பிரிவின் பிரகாரம் மடத்தைச் சம்பந்தித்த குறிப்பிட்ட தர்மகைங்கர்யம் இருக்குமாயின், அதை நிறைவேற்றும் டிரஸ்டியாய் மடாதிபதி நேரகக் கவனிக்கலாம். இதுவும் சிறிது ஆசுவாஸம் போலும்! இதர விஷயங்களைப் பொருத்தமட்டில் மடாதிபதியே தம் இஷ்டானுசாரமாகக் காரியஞ் செய்வது முடியாது.

இதை அடுத்திருப்பது மற்றோர் முக்கியமான விஷயம். அது மடத்தின் ஆதீனகர்த்தாக நியமிக்கப்படுவதை யொட்டியது. மடாதிபத்தியத்தை யார் வகிப்பதென்பதைக் குறித்து ஏதேனும் தகராறு ஏற்படுமேயானால், அல்லது (38வது பிரிவின் பிரகாரம்) பரம்பரையில் வரவேண்டியவர் மைனராகயிருந்து அவருக்குக் கார்டியன் சரிவர நியமனம் பெறுமலிருக்குமேயானால், அல்லது சித்தஸ்வாதீனமில்லாமலாவது சரீர அசௌக்கியத்தினாலாவது மடாதிபதியாயிருப்பவர் தாம் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து நிறைவேற்ற அசக்தராயிருப்பாரேயானால் மேற்குறிப்பிட்ட போர்டாரே மடாலய பரிபாலனஞ்செய்ய டிரஸ்டியொருவனை நியமிக்கலாம். இங்ஙனம் நியமிக்கப்படும் டிரஸ்டி சரியானபடி மடாதிபதி ஏற்பாடாகும் வரையில் மடாலய சம்பந்தமான வியவகாரங்கள் அனைத்தையும் கவனிக்கவேண்டியவராகிறார். இவ்வாறு டிரஸ்டியை நேமிக்கும் அவசரம் நேருங்காலத்தில் ஆதீனகர்த்தராகவரும் உரிமை சிஷ்யவர்க்கங்களில் எவருக்காவது இருக்கும்பக்ஷத்தில் அவ்வுரிமைகளைப் புறக்கணியாது போர்

டார் கவனிக்கவேண்டும். போர்டாரால் நியமிக்கப்படுபவர் மடாதிபதி டிரஸ்டிக்குள்ள சகல அதிகாரங்களையும் செலுத்தும் பாத்தியமுடையவராவர். (அவரையே சிஷ்யகோடிகள் பூஜிக்கவேண்டுமோ? என்னகாலம்!)

சட்டத்தின் 58வது பிரிவின்பிரகாரம் மடத்திற்கு விடப்பட்டிருக்கும் மானியங்களை எந்த மடாதிபதியாவது சீராக பரிபாலிக்கவில்லையென்றாவது மடத்துசொத்துக்களை முறையில்லாத்துறைகளில் செலவோ பராதீனமோ பண்ணுகிறார்களென்றாவது போர்டாருக்குத் தெரியவரும்படியான ஹேஷ்யம் இருந்தாலும் சரி அல்லது மடாலய பரிபாலனத்தில் அக்கரைகொண்ட 20 பேர்கள் ஒருமித்து மடத்தின் செம்மையான நிர்வாகத்தையொட்டி ஸ்கீம் ஏற்படுத்துமாறு விக்ஞாபனம் செய்துகொண்டாலுஞ்சரி போர்டார் உடனே மேற்குறித்த விஷயத்திற்காக விசாரணைத் தொடங்கவோ ஸ்கீம் ஏற்படுத்தவோ நிர்வாகத்தை நடத்த மற்றுமொருவரைத் தேர்ந்தெடுத்தோ அல்லது கூடவிருந்து வேலை செய்யச் சொல்லவோ அதிகாரம் கொண்டிருக்கிறார்கள். இவ்விஷயத்தில் மடாதிபதியையும் மற்றும் மடாலய பரிபாலனத்திலே அக்கரைகொண்டவர்களையும் போர்டார் ஆலோசனைக் கேட்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. போர்டார் செய்யும் காரியங்களில்எதிலாவது மடத்துஆதீனகர்த்தருக்குத் திருப்தியில்லாமற்போமாயின் அவர்தம் சொந்தச் செலவுபண்ணிக் கொண்டு கோர்ட்டு மூலமாகப் பரிகாரம் தேடிக்கொள்ளலாம். ஆனால் 64, 70-ம் செக்ஷன்களின் பிரகாரம் மடபரிபாலனத்தை யொட்டிய எந்த கோர்ட்டு நடவடிக்கைகளிலும் போர்டாருக்குண்டாகும் செலவுகளெல்லாம் மடத்து ஐவேஜிகளிலிருந்தே கொடுபடவேண்டும். மடாதிபதிக்கும் மற்றும் மடத்தில் அக்கரைகொண்டவருக்கும் ஆகும் நியாயஸ்தலச் செலவுகளை மடாதிபதிகளே கொடுக்கவேண்டுமா அல்லது மடத்து ஐவேஜிகளிலிருந்து கொடுக்கலாமாவென்பது கோர்டாருடைய நிர்ணயத்தைச் சார்ந்திருக்கிறது.

மேற்சொன்ன விஷயங்களில் போர்டாரின் தீர்மானமும், கோர்ட்டுக்குச் சென்றால் கோர்ட்டாரின் தீர்மானமும் முடிவானவை. ஆனால் ஸ்கிமை ரத்துசெய்யவோ வேறுவிதமாக மாற்றச் செய்ய போர்டார் நியாயஸ்தலத்தை நாடலாமென்று அதிகாரங் கொடுத்திருக்கிறார்கள்.

முன்னுரைக்கப்பட்ட அதிகாரங்களை அமுலுக்குக் கொண்டு வருவதில் ஆசாரியர்களின் நிலைமை எவ்வளவு கேவலமாயிற்றென்பதை நாம் கருதவேண்டாம். அவர்களுடைய அந்தஸ்து எவ்வளவுதூரம் தணிந்துபோயிற்றென்பதை நாம் கூறுவதும் அனாவசியம். சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட சட்டம் என்பதைத் தவிர மற்றவிதத்திலே சிறிதும் ஏற்பதற்கியலாத ஒருவிதியின் அமுலினால் மடாதிபதி தமது சொத்துக்களின் ஸ்வதந்திரத்தையிழப்பதல்லாமல் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தமது சொந்த ஐவேஜியிலிருந்து செலவிடவும் அனுமதிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட விசேஷ அதிகாரங்களைக்கொண்டு மதத் தலைவர்கள்மீதும் மதாசாரியாள்மீதும் கண்டிதமான அமுல் நடத்த பொறுப்பில்லாத போர்டார் தமது அதிகாரத்தைச் சரிவர செலுத்துகிறாரென்பதற்கு என்ன அத்தாக்ஷி இருக்கின்றது?

41, 42-வது பிரிவுகளின் பிரகாரம் வரவினங்களுக்கும் செலவினங்களுக்குமாக மடாதிபதி ஒழுங்கான கணக்குகள் வைக்க வேண்டும். பிரதிவருஷத்திலும் அக் கணக்குகளைக் கவர்ன்மெண்டு ஆடிட்டர்கள் பரிசோதித்துத் தணிக்கை பண்ணுவார்கள். அவ்விதமான தணிக்கை ரிபோர்ட்டின்நகல்கள் போர்டாருக்கும் கவர்ன்மெண்டாருக்கும் மடாதிபதிக்கும் அனுப்பப்படும். அப்படி அனுப்பப்படும் தணிக்கை ரிபோர்ட்டிலே 43-வது பிரிவின்படி விவரிக்கப்பட்டிருக்கும்விஷயங்களில் முறையற்றதும் நியாய விரோதமானதும் நேர்மையற்றதுமான மடாதிபதி செய்திருக்கக்கூடிய செலவினங்களைக் குறிப்பிட்டிருந்தும் மடத்துக்குச் சேர வேண்டிய சொத்துக்களையோ, பணங்களையோ மடாதிபதிகளின் அஜாக்கிரதையினாலாவது, அயோக்கியத்தனத்தினாலாவது வசூலியாமல் விட்டிருப்பது மடத்திற்குண்டாயிருக்கும் நஷ்டம், சொத்துவிரயம் முதலியனவும் மேற்படி ரிபோர்ட்டில் குறிக்கப்பட்டிருக்கும்.

இன்ன செலவினம் முறையற்றதென்றும், நியாய விரோத மானதென்றும், வீணாகச் செய்யப்பட்டதென்றும் நிர்ணயம் செய்பவர் யாவர்? போர்டாரன்றி வேறு எவருமல்ல. அப்படி யானால் போர்டாரும், அதன்கீழ் வேலைசெய்யும் சிப்பந்திகளும் மடத்து மானேஜ்மெண்டு விஷயத்தில் இஷ்டானுஸாரமாக வேலை செய்ய இடமிருக்கிறதன்றோ! ஒப்படைக்கப்பட்ட டிரஸ்டை பாதுகாப்பது இதுதானா?

கணக்குகளைத் தணிக்கை பார்ப்பதற்காகச் செய்யப்படும் செலவுகள் (44-வது பிரிவின்பிரகாரம்) மடத்து ஐவேஜிகளிலிருந்து கொடுபடவேண்டும். குறிப்பிட்ட காலத்துள் கொடுபடாவிட்டு அவை ரெவினியூ தீர்வையாக வசூலிக்கப்படும்.

ஒவ்வொரு வருஷத்திலும் போர்டார் நிர்ணயிக்கும் பாரத்திலே மடாதிபதியானவர் அடுத்த வருஷத்திற்கான வரவு செலவு திட்டப்பட்டியையும் முந்திய வருஷத்து வரவுசெலவுகளைக் காட்டும் ஸ்டேட்மெண்டையும் தயாரித்துக்கொடுக்கவேண்டும். (57-வது பிரிவு) இதின்பேரிலும் ஆடிட்டர் விடுக்கும் தணிக்கை ரிபோர்ட்டிலும் போர்டார் என்ன செய்யக்கூடுமென்பதை முன்னமேயே விவரித்திருக்கிறோம்.

மடத்து ஐவேஜிகள் எப்படி செலவிடப்படவோ, விநியோகம் செய்யப்படவோ ஆகின்றனவென்பதைக் கவனிப்போம். 62-வது பிரிவின் பிரகாரம் மடாதிபதிகள் தமது மடாலயங்களுக்கும் கோயில்களுக்கும் வரும் சிஷ்யர்கள், ஸேவார்த்திகள், யாத்திரிகர் முதலியோருடைய ஸௌக்கியம் சௌகரியம் பாதுகாப்பு முதலியவைகளைக் கவனிக்க மடத்து ஐவேஜியிலிருந்து செலவு செய்யலாம். ஆனால் அப்படிப்பட்ட செலவுகள் போர்டார் நிர்ணயித்திருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டே யிருக்கவேண்டும். மற்றப்படி எந்தவகையிலும் போர்டாரின் உத்தரவின்றி ஒருபைசாவேனும் மடாதிபதிகள் தொடக்கூடாது.

இதல்லாமல் போர்டார் 63-வது செக்ஷன் பிரகாரம் ஒரு விசாரணை செய்து, (1) மடத்தின் நோக்கம் ஆரம்பத்திலிருந்து ஈடேறவில்லை. ஈடேற்றும்படியான ஸ்திதியில் இல்லை என்றாவது, (2) முதல நோக்கத்தை நிரைவேற்றவல்ல சாதனங்கள் கிடையா

என்றுவது, (3) மானியங்கள் எவையோ அவைகளின் பரிபால னத்துக்காக பணமீந்து திருப்திசெய்வித்தபிறகும் மடாலயங்க ளின் துரஸ்துவேலைகளுக்காகபணமெடுத்துவைத்தபிறகும் பணம் மிகுதியாயிருக்கிறதென்றுவது, போர்டார் தீர்மானிக்குமிடத்து அந்த மானிய சொத்தையோ, மிகுதியாயிருக்கும்பணத்தையோ மடத்தின் நோக்கங்களுக்கு மாறுபட்டிராத மதம், கல்வி, தர்மம் முதலான கைங்கரியங்களுக்கு செலவிடலாமென்று உத்திரவிட வும் அதிகாரம் பெற்றிருக்கின்றனர்.

சாதாரணமாயிருக்கும் இந்துஸேவார்த்திக்கு ஈதெல்லாந்தெ ரியாது. இம்மாறுபாடுகளை மனத்தினுல் ஸ்மரித்துகூட இருக்க மாட்டான். ஆனுல் பொருப்பில்லாதிருக்கும் போர்டாரோ அதி காரம் என்னும் குடையின்கீழ் மடத்தை எவ்விதமாணுலும் தம் இஷ்டப்பிரகாரம் நடத்தமுடியும், வரவு சிலவு திட்டத்தை நிர் ணயம் செய்வதும் சிலவுபண்ணிப் பணம் மிகுந்திருப்பதாக நிர் ணயம் செய்வதும் ஆன அதிகாரத்தைக் கொண்டு போர்டார் எவ் வளவாயினும் வேலை செய்யலாமன்றே? இப்போக்கொத்த விஷயங்களில் மடாதிபதிகளுக்கு எவ்வித சுதந்தரமும் கிடை யாது. கடைத் தேங்காயை எடுத்து வழிப்புள்ளையாருக்குடைக் கும் இம்முறைதான் என்னே? மடாதிபதியாவது மடத்தில் ஆர் வம்கொண்ட வேறெவராவது போர்டாரது தீர்மானத்தில் திரு ப்தியடையாமற்போனுல் நியாயஸ்தலத்தில் நடவடிக்கை நடத் தலாமாம், ஆனுல் அப்படி நடத்த அவர்கள் தம் சொந்தபணத் தையே சிலவிட வேண்டுமாம். போர்டார் மாத்திரமோ முன் போல எதிர்வாதாட மடத்து ஐவேஜுகளிலிருந்து பணமெடு த்துச் சிலவிடக்கூடுமாம். மற்றும் நியாயஸ்தலத்தீர்ப்போ, அது இல்லாத பட்சத்தில் போர்டாரின் தீர்ப்போதான், முடிவான பைஸலாம் வேருவகையான திருத்தத்திற்கோ அல்லது தீர்ப்பை ரத்து பண்ணுவதற்கோ வேண்டி மனுச்செய்து கொள்ளும் அதிகாரம் போர்டாருக்குமாத்திரம்தான் உண்டாம். மடத்தின் ஸ்வாந்தாருக்குகூட இல்லையாம்.

போர்டாருக்கும் சிலவுகளுக்காக (65-வது பிரிவின் பிரகா ரம்) மடத்து வரும்படியிலிருந்து 100க்கு ஒனறரைக்குறையாத

படிபணம்செல்லாகவேண்டும், இவ்வளவுபணம் கொடுக்கவேண்டு மென்று போர்டார் நிர்ணயம்செய்து மடத்துக்கு நோட்டிசு அனுப்புவார்கள். அதுகிடைத்த மூன்றுமாதகாலத்திற்குள் ளாக பணத்தை மடாதிபதிகள் செலுத்திவிடவேண்டும். அவ் விதம் செலுத்துவதற்கு அவர்கள் தவறும்பட்சத்தில் (66-வது பிரிவின் பிரகாரம்) மடத்திற்கு எதிராகடிகிரி நிரைவேற்றப்பட்ட தொகையையொப்ப போர்டு பிரசிடண்டினுல் அத்தொகையைவசூலிக் கப்படும். மடாதிபதிகளேயும், சிற்சில குறிப்பிட்ட கோயில்களே யும் மேற்பார்வை பார்ப்பதற்காக அமர்த்தப்பட்டிருக்கும் சிப் பந்திக் கூட்டத்தாருக்கு போஷணை கொடுப்பதன் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட தண்டப் போலீசுவரியே போலுமிது?

மடத்துசொத்துக்களின் பரிவர்த்தனைவிக்கிரியம் கொதுவை அடமானம் முதலான பாராதீனங்கள் ஐந்து வருஷங்களுக்கு மேல் செல்லமாட்டா. எனவே மேற்குறித்தவாறு செய்யப்படு பவை ஐந்து வருஷ காலத்திற் குட்பட்டிருக்கவேண்டும். அப் படிச்செய்வதுஅவசியமாகவோ அன்றி மடத்துக்கு லாபகரமாக வோ, இருக்குமிடத்து அப்போதுகூட போர்டாரின் அனுமதி யை முன்னதாகப் பெற்றிருக்கவேண்டும். இவ்விஷயத்திலும் போர்டார்செய்யும் உத்தரவே முடிவானது. அதன் பேரில் அதிருப்தியடைந்த மடாதிபதியோ மற்றெவரோ ஏற்கனவே அறிவிக்கப்பட்டதையொப்ப நியாயஸ்தலத்துக்குச் செல்வதைத் தவிர வேறுவழியில்லே. அதற்கு முன்னற்குறித்த நிப்பந்தனே களே ஏற்கும்.

போர்டாரால் நியமிக்கப்பட்ட ஒரு டிரஸ்டி மடத்தைச் சேர்ந்த சொத்துவகைராக்களே ஸ்வாதீனப்படுத்திக்கொள்வதில் ஏதாவது ஆட்சேபங்களுக்காவது நிர்ப்பந்தங்களுக்காவது உட் படநேருமேயானுல் (74 வது பிரிவின் பிரகாரம்) போர்டாரின் உத்தரவை கோர்ட்டில் தாகல் செய்து டிகிரி நிரைவேற்றுவதை போல உத்தரவுபெற்று மேற்படி சொத்து வகைராக்களே சுவா தீனஞ்செய்து கொள்ளலாம்.

கோர்ட்டு உத்திரவுபெற்று நிறைவேற்றப்படும் டிகிரியை ஆட்சேபிப்போர் அதனுல் ஏற்படும துன்பங்கள் இத்தன்மை யவை என்பதையும் அறியவேண்டும்,

எந்த மடமாவது இந்தச் சட்ட விதிகளுக்கு (அமுலுக்கு) உட்பட்டதா அல்லவா வென்னும் விவாதமோ சந்தேகமோ ஜனிக்குமேயானால் (80 வது பிரிவின் பிரகாரம்) இவ்விஷயமாக போர்டார் செய்யும் தீர்மானமே முடிவானதாகும். அதற்கிணங் காதவர்கள் கோர்ட்டிற்குப்போவதைத் தவிர வேறுவழியில்லை. அதனாலுண்டாகும் அசௌகரியங்களுக்கு அவர்கள் உட்படவும் வேண்டும்.

போர்டாரோ அல்லது மடாலயங்களில் அக்கரைகொண்ட வேறெவரேனும் போர்டாரின் சம்மதத்தைப் பெற்று (69வது பிரிவின் பிரகாரம்) கோர்ட்டில் தாவாசெய்து அடியிற்கண்ட வகைகளில் டிகிரி வேண்டமுடியும்.

1. ஒருமடாதிபதியை நியமிப்பதற்காவது நீக்குவதற்காகாவது
2. யாதாமொருசொத்தை ஒருடிரஸ்டியிடம் ஒப்புவிப்பதற்காவது
3. சமர்ப்பிக்கப்பட்ட மானியத்தை குறிப்பிட்டதோர் காரியத்துக்காக சில விடவேண்டுவதற்காவது.
4. மற்றுமேதேனும் பரிகாரம் தேடுவதற்காவது

இதற்காகும் கோர்ட்டுச்சிலவுகள் மடத்து ஐவேஜியிலிருந்து தான் கொடுக்கப்படும். மடாதிபதியாயிருக்கும் எளிய ஸந்நியாஸியோ தமது கட்சிவாதத்தை நிரூபிப்பதற்காக பணம் தேட வேண்டி அலையவேண்டும். அல்லது மடத்தைவிட்டுவெளியேற வேண்டியதே கதி.

இவைகளே மடங்களைப் பாதிக்கும் முக்கியமான விதிகளிற் சிலவாம். விலக்கப்பட்ட கோயில்கள் மடாதிபதிகளுடையவும், ஜமீந்தார்களுடையவும் பாரம்பரிய ஆதீனத்திற்குட்பட்ட தேவஸ்தானங்கள் முதலியன. இந்த தர்மசொத்து பரிபாலன சட்டத்தின் விதிகளுக்குட்படவேண்டுவனவே.

யாவராலும் நன்மதிக்கப்பெற்ற மதாசாரியர்களின் நிலைமையைக்கண்டு ஆசையுறுவார் இப்போதுளவருமிலர். ஏதோ முறை தவறின சில மடாதிபதிகளைச் சீர்திருத்தம்செய்வதான வியாஜத்தின் கீழாக வயது, கல்வி, கௌரவம், யோக்கியதை, அந்தஸ்து முதலிய குணவிசேஷங்கள் நிரம்பிய பெரியோர் தத்தம் பீடங்களில் அமர்ந்து ஆதீனநிர்வாகத்தைக் கவனித்து வந்திருப்பது போக எவர் தம்மெதிர் வந்து தலைவணங்கி அடிபணிந்து தண்டம் சமர்ப்பிப்பரோ, அவருக்கு முன்னிலையில் கேவலமான நிலை

மைக்கு வரும்படி ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய சொந்த உரிமைகள் பிடுங்கப்பட்டுப்போயின. மற்றவர்களுக்காக தாம் கணக்குவைக்கும் சிப்பந்திபோல் ஆகிறார்கள். அற்ப விஷயங்களுக்குக்கூட ஸகல அதிகாரமும் பொருந்திய போர்டாரின் தயவு தாட்சிண்ணியங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். எப்பக்கத்திலாகட்டும் மடாதிபதிகள் ஸ்வேச்சையாக ஏதொன்றும் செய்யமுடியாது. அதற்குரிய சௌகரியங்கள் எடுபட்டுப்போயின. இதற்குமுந்தி தமது சொந்தமாயிருந்த பணம் இப்போது தமக்குச் சொந்தமல்ல. தம் சொந்தப் பணத்தை போர்டார் எது வேண்டுமானாலும் செய்யலாம். தாம் செலவு செய்ய சுதந்தரமில்லை. தமது விஷயங்களில் இப்படி அனாவசியமாக பிரவேசித்ததின் சம்பந்தமாக டிரஸ்டிகள் எவரும் கவர்ண்மெண்டாரையோ அல்லது மந்திரிமாரையோபார்த்து பேட்டிகண்டு உரைத்ததாகக் காணோம்.

ஸெலக்ட் கமிடியின்முன் சிற்சில மடங்களுக்காகவேண்டி வாக்குமூலம் கொடுத்த சிலர் மடத்தில் அக்கரை அல்லது லக்ஷியமுள்ளவர்தாம் அவ்விவகாரங்களில் பிரவேசிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அப்படியிருக்க அதிகார வர்க்கத்தாரது பிரவேசக் குறைவினால் கவர்ன்மெண்டாருக்கேனும் ஜனங்கத்தாருக்கேனும் லக்ஷியக்குறைவு என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும். ஜமீந்தார்களும் மடாதிபதிகளும் தமது பிரைவேட் சொத்துக்களிலிருந்து தம் பார்வைக்குள்பட்ட கோயில்களின் மீதுள்ள அபிமானத்தினால் அபாரமாகப் பணம் செலவு செய்துவந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் இச்சட்ட அமுலினால் தமது பாத்தியதைகளை இழக்கும் கேவலமான நிலைமையை அடைந்துவிட்டார்கள். மற்ற விபரங்களுக்கு சட்டத்தை சவிஸ்தாரமாய்பார்க்கவேண்டும்

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் மடாதிபதிகளுக்கு மரியாதையும் மதிப்பும் சித்திப்பதெப்படி? மதவிஷயங்களைப் பொருத்தமட்டில் பிரவேசிப்பதில்லையென்று வாக்குத்தத்தம்செய்திருக்கும் கவர்ன்மெண்டார் சட்டவரம்புக்குட்பட்ட இந்து ஸேவார்த்திகளுடைய மதவுணர்ச்சிக்கு மதிப்புக்காட்டுவது எங்ஙனம்? இது சட்டமுறையினால் ஹிந்துமதத்தின் அஸ்திவாரத்தை அடியுடன் கல்லி அதன் தனச்சொரியை அழிப்பதாகுமன்றோ இத்தகைய ஸ்திதியிலே மடங்களின் தலைவராயிருக்க எவர்தான் விரும்புவர்? நல்லது மடங்கள் எக்கேடு கெட்டுப்போகட்டும் அதன் வருமானத்தைச் சேர்ந்தவரையில் கடைத் தேங்காயை யெடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கும் வழியைப் பின்பற்றலாம் என்று எவரும் நினைப்பது சகஜமே.

அடியார்க்கடியன்.